
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அயின்



# மன்னா..

பொழிவு : 15 MARCH '2023 ஆகாரம் : 03



"அவர் இரவும் பகலும் நாற்பது நாள் உபவாசமாயிருந்தபின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று"

– மத்தேயு:4:2

AND AFTER FASTING FORTY DAYS AND FORTY NIGHTS, HE WAS HUNGRY.

- MATTHEW:4:2

# CHURCH MONTHLY PROGRAM SCHEDULES

| | |
|---|---|
| SAT<br>10.30 AM<br>1.00 PM | MONTHLY FASTING PRAYER<br>1 ST SATURDAY OF EVERY MONTH<br>CONTACT: THE PRESBYTER |
| SAT<br>6.30 PM<br>7.30 PM | CHILDREN'S BIBLE SCHOOL<br>ECC.CHURCH CENTER<br>MRS. AUGUSTA LAWRENCE @ 056 641 1676 |
| SAT<br>7.45 PM<br>9.00 PM | 1 ST WEEK - COMMUNION SERVICE<br>OTHER WEEKS - EVENING SERVICE<br>LAST WEEK - PRAISE & WORSHIP SERVICE |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 2 ND FRIDAY OF EVERY MONTH<br>MEN’S FELLOWSHIP PRAYER MEETING<br>MR. ASHOK KUMAR @ 050 842 9659 |
| FRI<br>7.30 PM<br>9.00 PM | 3 RD FRIDAY OF EVERY MONTH<br>WOMEN’S FELLOWSHIP PRAYER MEETING<br>MRS. SHALY MELBIN @ 056 394 1817 |
| DAILY<br>6.00-<br>6.30AM | LENT SERVICE (ROMANS)<br>SPECIAL SERVICE @Zoom<br>TIMING - 6.00am-6.30am |
| THU<br>7.30 PM<br>8.30 PM | 4TH THURSDAYOF EVERY MONTH<br>YOUTH FELLOWSHIP PRAYER MEETING<br>MR. SANTHOSH JOEL KUMAR @ 056 875 2723 |

# FROM THE PASTOR'S *Desk*



கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!
ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால்
திருச்சபை குடும்பத்தார் அனைவருக்கும்
வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

" பசியுள்ளவனுக்கு உன் ஆகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கிறதும், துரத்துண்ட சிறுமையானவர்களை வீட்டிலே சேர்த்துக் கொள்கிறதும், வஸ்திரமில்லாதவனைக் கண்டால் அவனுக்கு வஸ்திரங் கொடுக்கிறதும், உன் மாம்சமானவனுக்கு உன்னை ஒளிக்காமலிருக்கிறதும் அல்லவோ எனக்கு உகந்த உபவாசம்"

— ஏசாயா:58:7



*'Is it not to share your bread with the hungry and bring the homeless poor into your house; when you see the naked, to cover him, and not to hide yourself from your own flesh'*

**- Isaiah:58:7**

இந்த தபசு நாட்களில் போலியான உபவாசத்தை தவிர்த்து உண்மையான, அர்த்தமுள்ள உபவாச நாட்களாக இருக்க அழைக்கப்படுகிறோம்.
அது,

- **தீய நடத்தைகளை விட்டு விடுதல் (ஏசாயா:58:2).**
- **தேவையிலிருப்போர்க்கு உதவுதல்.**
- **பசித்தோருக்கு உணவை பகிர்ந்து கொடுத்தல்.**
- **தங்க இடமில்லாதவருக்கு இல்லத்தில் இடம் தருதல்.**
- **உடையற்றோருக்கு உடையளித்தல்.**

இதுவே ஆண்டவருக்கு உகந்த வாழ்வுக்கான உபவாசம் என்பதை புரிந்து கொண்டு இந்த லெந்து நாட்களில் நம்மை அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்

## லெந்து கால தியானம் -2023

இந்த தபசு காலங்களில் நமது திருச்சபையின் வழியாக வருகின்ற 40 நாட்கள் லெந்துகால தியானம் ஒவ்வொரு நாளும் காலை 6.00 மணி முதல் 6.30 மணி வரை தினமும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இது ரோமர் நிருபத்தில் இருந்து திருமறை தியானம் ZOOM – வாயிலாக நடைபெறும் திருச்சபையின் குடும்பத்தினர் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் வருகின்ற நாட்களில் நமது திருச்சபையில் நடைபெறும் லெந்து கால நிகழ்வுகள் அனைத்திற்காகவும் ஜெபிக்கவும், குடும்பமாய் பங்கு பெறவும் அழைக்கப்படுகிறீர்கள்.

## விடுமுறை வேதாகம பள்ளி-2023 ( VBS-2023)

இந்த மாதம் இறுதி வாரத்தில் (மார்ச் –26 முதல் ஏப்ரல்–1வரை) நமது திருச்சபையின் பிள்ளைகளுக்கான விடுமுறை வேதாகம பள்ளி (VBS–2023) நடைபெறும். இதில் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை உற்சாகப்படுத்தி அனுப்பி வைக்குமாறும், அத்துடன் இந்த ஊழியத்திற்காய் ஜெபிக்குமாறும், உங்களுடைய பங்களிப்புகளை அளிக்குமாறும் அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

தொடர்ந்து இந்தக் காலங்களில் நமது வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் தேசங்களுக்காக, திருச்சபைகளுக்காக, ஊழியர்களுக்காக, ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலைவாய்ப்பு களுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, நமது பிள்ளைகளின் கல்விக்காக அவர்கள் எழுதுகின்ற தேர்வுகளுக்காக, உயர்கல்விக்கான ஆயத்தங்களுக்காக, அத்துடன் அவர்களின் ஆவிக்குரிய வாழ்வுக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். மேலும் நமது திருச்சபையின் அடைத்து திருப்பணிகளுக்காக, திருச்சபையின் அனைத்து குடும்பங்களுக்காக குறிப்பாக தேவையில் இருப்போர், பல்வேறு எதிர்பார்ப்புகளுடன் காத்திருப்போர் அனைவருக்காகவும் ஊக்கமாக ஜெபிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக....

ஆண்டவரின் உன்னதப் பணியில் உங்கள் ஆயர்

*Rev.S.P.Baskar*



# ஆண்டவர் காட்டும் (நோன்பு) உபவாசம்

- மத்தேயு: 4:1-11

## முன்னுரை:

ஆண்டவர் இயேசுவின் காலத்திலும் நோன்பு (உபவாசம்) கடைப்பிடிக்கும் வழக்கம் இருந்தது. "உண்ணா நோன்பு" (அசிஸ்டோஸ்- *ASISTOS*) என்ற கருத்து வழக்கத்தில் இருந்தது. ஆனால் இயேசுவின் காலத்தில் யூதர்கள் பாவக்கழுவாய் நிறைவேற்றும் நாளில் மட்டும் கட்டாய நோன்பு கடைபிடித்தனர். இந்த நாள் வருடம் தோறும் "திஸ்ரி" என்னும் யூதர்களின் பத்தாவது மாதத்தில் கடைபிடிக்கப்படுகிறது. (அப்:27:9) இயேசு கிறிஸ்து தன்னுடைய மீட்பு பணியை வெளிப்படையாகத் தொடங்கும்முன், நாற்பது நாள் உபவாசம் இருந்தார்.

இது பழைய ஏற்பாட்டின் நாற்பது நாள் உபவாசத்தின் (நோன்பு) நிறைவு ஆகும். உபவாசத்தை (நோன்பு) கடைபிடிக்கும் நமக்கு நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து கற்றுத்தரும் பாடம் என்னவென்றால் உபவாசத்தின் காலத்தில் நம்மைக் கவர்ந்திழுக்கும் சோதனைகளில் அகப்படாமல் கவனமாயிருக்க வேண்டும் என்பதாகும். இயேசு கிறிஸ்து உபவாசத்தை முடிக்கும் சூழலில் சாத்தான் அவரைச் சோதித்ததையும் இயேசு அதை மேற்கொண்டதையும் நாம் இந்த பகுதியில் காண முடிகிறது.

> "அவர் இரவும் பகலும் நாற்பது நாள் உபவாசமாயிருந்தபின்பு, அவருக்குப் பசியுண்டாயிற்று"
>
> — மத்தேயு:4:2

## 1. தன்னலம் (சுயநலம்) சார்ந்த கவர்ச்சிகளில் விழாதிருத்தல் (மத்:4:3,4)

நாற்பது நாட்கள் உபவாசமிருந்து பசியாய் இருந்த ஆண்டவர் இயேசுவிடம் கல்லை அப்பமாய் மாற்றச் சொன்னது சாத்தான்.

இயேசுவிடம் இருந்த சக்தியைப் பயன்படுத்தி அவரது தேவையைப் நிறைவு செய்து கொள்ளத் தூண்டியது சாத்தான். இது நேரம் அறிந்து, தேவை உணர்ந்து கொண்டுவரப்பட்ட ஒரு சோதனை. "நீர் தேவனுடைய குமாரனேயானால், இந்தக்

கல்லுகள் அப்பங்களாகும்படி சொல்லும் என்றான். (மத்:4:3) இயேசு கிறிஸ்துவின் சுய அடையாளத்தை, இறை ஆற்றலைச் சவால் விட்டுக் கவர்ச்சியான வார்த்தைகளால் சாத்தான் சோதித்தான். இறைமகன் இயேசு கிறிஸ்து எப்படிப்பட்டவராய் இருக்க வேண்டும் என சாத்தானே இலக்கணம் வகுத்துக் கொடுப்பதையும் காண்கிறோம். இறைமகன் என்றால், புதுமைகள் நிகழ்த்த வேண்டும், அதுவும் தன்னுடைய சுயநலத் தேவையை நிறைவு செய்யும் வண்ணம் புதுமை செய்ய வேண்டும் என்பது சாத்தான் இறை மகனுக்கு வகுத்த இலக்கணம் ஆகும். ஆனால் இயேசு கிறிஸ்து சாத்தானுக்குச் சொன்ன பதில் அழகானது. தன் உடல் பசியை விட, ஆன்மீக பசியை தீர்க்கும் உணவைப் பற்றி பேசினார். "மனுஷன் அப்பத்தினாலே மாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார். (மத்:4:4) இது மோசே சொன்னதை இயேசு இங்கு எடுத்துக் கூறுகிறார் (உபா:8:3) இங்கு தன் சொந்த பசியைத் தீர்த்துக் கொள்ள மறுத்த இயேசு கிறிஸ்து. இவ்வுலக மக்களின் பசியைத் தீர்க்க தன் ஆற்றலைப் பயன்படுத்தினார் என்பதுதான் உண்மை. இன்றைக்கு ஆண்டவர் நமக்கு கொடுத்துள்ள ஆற்றல்கள், திறமைகள், அருட் கொடைகள் அனைத்தும் சுயநலத் தேவைகளை நிறைவு செய்வதற்கு அல்ல. நம் அருட்கொடைகளை முதன்மைப்படுத்தும் கவர்ச்சியான காரியங்களை விலக்கி வாழ்வோம் என்பதை புரிந்துக் கொள்ள அழைக்கப்படுகிறோம்.

## 2. குறுக்கு வழியில் பலன் தேடாதிருத்தல். (மத்தேயு:4:5–7)

இறைமகன் இயேசு கிறிஸ்து இந்த உலகத்தை வெல்வதற்கும், உலகை மீட்பதற்கும் எந்தத் தொந்தரவும், துன்பமும் இல்லாத குறுக்கு வழி ஒன்றை சாத்தான் காட்டுகிறது. எருசலேம் கோவிலின் மேலிருந்து இயேசு குதிக்க வேண்டும். "நீர் தேவனுடைய குமாரனேயானால் தாழக்குதியும்; ஏனெனில், தம்முடைய தூதர்களுக்கு உம்மைக்குறித்துக் கட்டளையிடுவார்; உமது பாதம் கல்லில் இடறாதபடிக்கு, அவர்கள் உம்மைக் கைகளில் ஏந்திக்கொண்டு போவார்கள் என்பதாய் எழுதியிருக்கிறது என்று சொன்னான். (மத்:4:6) அத்துடன் எருசலேம் முழுவதும், ஏன் உலகம் முழுவதுமே இயேசுவின் சீடர்களாகிவிடுவர். முப்பத்து மூன்றரை ஆண்டுகள் வாழ்வில், மூன்றரை ஆண்டுகள் கடினமான பணி, இறுதி மூன்று நாட்கள் கொடிய வேதனை, இறுதி மூன்று மணி நேரங்கள் சிலுவையின் கொடூரச் சித்திரவதை என இவை எதுவும் தேவையில்லை. ஒரு நொடி பொழுது போதும் எருசலேம் கோவிலில் சாகசம் ஒன்று போதும். உலகம் இயேசுவின் காலடியில் கிடக்கும் என்ற கனவுகளை சாத்தான் அடுக்கி வைத்தது. இது குறுக்கு வழியில் பெயரும், புகழும், அனைவருக்கும் மேலான நிலையும் பெற இந்த சோதனை முன்வைக்கப்படுகிறது.

"இருளில் இருக்கும் ஜனங்கள் பெரிய வெளிச்சத்தைக் கண்டார்கள்; மரண இருளின் திசையிலிருக்கிறவர்களுக்கு வெளிச்சம் உதித்தது என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது."

- மத்தேயு 4:15,16

இங்கு "இயேசு கிறிஸ்து உன் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாராதிருப்பாயாக என்றும் எழுதியிருக்கிறதே என்றார். (மத்:4:7) இது உபாகமம்:6:16-இல் "உங்கள் தேவனாகிய கர்த்தரைப் பரீட்சை பாரதிருப்பீர்களா". என்ற இறைவார்த்தையை இயேசு கிறிஸ்து சுட்டிக் காட்டி இந்த சோதனையை மேற்கொண்டார். இன்றைக்கு உயர் பதவிகளும், அந்தஸ்த்தும் பெற குறுக்கு வழிகள் காட்டடப்படும் போது அந்த வழியில் சென்று கடவுளின் அங்கீகாரத்தை இழந்து விடாமல். துன்பமானாலும் நேர்வழியில் வாழ்ந்து கடவுளுக்கு பிரியமுள்ளவர்களாய் வாழ அழைக்கப்படுகிறோம்.

## 3.தீய சக்திகளுடன் சமரசம் பண்ணாதிருத்தல்(மத்தேயு:4:8–10)

இந்த இந்தப் பகுதியில் உலகமனைத்தையும் இயேசுவிடம் ஒப்படைக்க விரும்புவதாக சாத்தான் சொல்கிறது. உலகை வென்று அதை தந்தையிடம் ஒப்படைக்க மனுவுருவான இயேசு இப்படி ஒரு வாய்ப்பு வரும்போது, ஏற்றுக்கொண்டிருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆனால், அங்கு சாத்தான் வைத்த நிபந்தனை அதிர்ச்சியளிக்கிறது.

இயேசு உலகை வெல்ல வேண்டுமானால் அவர் ஒன்று செய்ய வேண்டும் சாத்தானோடு சமரசம் செய்து, சாத்தானிடம் சரணடைய வேண்டும் என்பதுதான் இங்கு வந்து சோதனையாகும். ஆனால் இயேசு கிறிஸ்து. "உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவருக்கே ஆராதனை செய்து, அவருடைய நாமத்தைக்கொண்டே ஆணையிடுவாயாக". (உபா:6:13) என்ற இறை வார்த்தையைக் கைக்கொண்டு இந்த சோதனையை இயேசு கிறிஸ்து மேற்கொண்டார். சாத்தான் சோதித்தது போதும் என்று இயேசு சாத்தானை விரட்டியடித்தார். சாத்தான் முன் சரணடைய மறுத்த இயேசு சிலுவையில் தொங்கிய போது "பிதாவே உமது கையில் என் ஆவியை ஒப்புவிக்கிறேன்" என்று ஆண்டவரிடம் சரண் அடைந்து இந்த உலகத்தை தன் வசமாக்கினார். இன்றைக்கு தவறான வழிகளில் தீய சக்திகளுடன் சமரசம் செய்தால் இறையரசுக்குரிய வழியினின்று நம்மை திசைத்திருப்பும். அந்த சக்திகளுக்கு முன் சரணடைந்தால் நம் வாழ்வை அழிவுக்கு கொண்டு செல்லும். எதற்கும் எந்த சூழலிலும் தீமையோடு சமரசம் செய்ய வேண்டாம் என்பதை புரிந்து கொள்ள அழைக்கப்படுகிறோம்.

## நிறைவாக:

இன்றைக்கு தவறான வழிகளில் சென்று சுயநலம் சார்ந்த கவர்ச்சிகளில் விழாமல் ஆண்டவர் காண்பிக்கும் உண்மையான வழியில் நடப்பது " ஆண்டவர் காட்டும் (நோன்பு) உபவாசம்" ஆகும். அந்த வாழ்வைப் பெற்று இந்த தபசு நாட்களில் (லெந்து) அர்பணித்து வாழ அழைக்கபடுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.
சிலுவை நாதரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்.

Rev.S.P.Baskar




# மரியாளின் அர்ப்பணிப்பு

—மத்தேயு:26:6—13

மனுக்குலத்தின் வாழ்வில் மிக முக்கியமாக ஆண்டவருக்கு முன்பாக இருக்க வேண்டிய பண்புகளில் ஒன்று அர்ப்பணிப்பு ஆகும். வாழ்க்கையில் பெரிய வெற்றிகளை அடைந்த பிறகு முன்மாதிரியாக திகழ்ந்தவர்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் வாழ்ந்தவர்களாக கருதப்படுவார்கள். அந்த வகையில் திருமறையில் சொல்லப்பட்டுள்ள மரியாளின் அர்ப்பணம் உள்ள வாழ்வு ஒரு தலை சிறந்த வாழ்வாகும். இந்தச் செய்தியை இயேசு கிறிஸ்து குறிப்பிடும் போது இது உலகம் முழுவதும் அறிவிக்கப்படும் என்று சொல்லுகிறார். ஆம் இன்று உலகம் முழுவதும் இந்தச் செய்தி அறிவிக்கப்பட்டு கொண்டிருக்கிறது

### திருமறையில் மரியா என்பதின் பொருள்:

மரியாள் என்றால் "கண்ணீர்" என்று அர்த்தமாகும்.



**ஒரு ஸ்திரீ விலையேறப்பெற்ற பரிமள தைலமுள்ள வெள்ளைக்கல்பரணியைக் கொண்டுவந்து, அவர் போஜனபந்தியிலிருக்கும்போது, அந்தத் தைலத்தை அவர் சிரசின்மேல் ஊற்றினாள்.**

**– மத்தேயு 26 : 7**

கிரேக்க மொழியில் "மரியாள்" என்பதும் எபிரேய மொழியில் "மிரியாம்" என்பதும் ஒன்றுதான். மேலும் மரியாள் என்பதற்கு "புரட்சி" என்றும் பொருள் கொள்ளப்படும்..

### திருமறையில் மரியாள் என்கின்ற பெயரில் ஐந்து பேர் உண்டு

1. கன்னி மரியாள் (இயேசுவின் தாய்)
2. மகதலேனா மரியாள் (ஏழு பிசாசு நீங்கியவள் மற்றும் இயேசுவின் உயிர்த்தெழுதல் காட்சியை முதலில் கண்டவர்)
3. பெத்தானியா மரியாள் (லாசர் மற்றும் மார்த்தாளின் சகோதரி, இயேசுவின் பாதத்தில் தைலம் பூசியவர்)
4. யாக்கோபு, யோசே என்பவர்களின் தாயாகிய மரியாள். (கிலேயோப்ப மரியாள்)
5. மாற்குவின் தாயாகிய மரியாள்.

### பெத்தானியா மரியாள் (லாசர் மற்றும் மார்த்தாளின் சகோதரி, இயேசுவின் பாதத்தில் தைலம் பூசியவர்)

இந்த மாபெரும் நிகழ்ச்சியானது நான்கு நற்செய்தி நூல்களிலும் சொல்லப்பட்டுள்ளது(மத்தேயு:26:6—13, மாற்கு:14:3—9, லூக்கா:7:36—50, யோவான்:12:1—8)யோவான் நற்செய்தியாளர் இயேசு கிறிஸ்து

எருசலேமில் பவனியாக நுழைவதற்கு முந்தின இரவில் நடந்ததாகக் கூறும் செய்தியில் இயேசுவுக்கு தைலம் பூசியப் பெண் மார்த்தாவின் சகோதரி மரியா என்று பதிவு செய்கிறார். இந்த மரியாளின் ஆழமான அர்ப்பணிப்பை குறித்து சிந்திக்க அழைக்கப்படுகிறோம்.

**1. மரியாளின் தாழ்மையின் அர்ப்பணிப்பு. (காலடிகளை கழுவுதல்)**

பந்தி இருக்கும்போது விருந்து படைப்பவரின் வீட்டு வேலையால் விருந்தினரின் கால்களைச் சுற்றி வந்து கழுவுவது வழக்கம் (லூக்கா:7:44, யோவான்:13:3—5) ஆனால் சீமோன் வீட்டில் இயேசு வந்தபோது அவர் இயேசுவின் கால்களைக் கழுவவில்லை, ஏற்கனவே தொழு நோயால் புறக்கணிக்கப்பட்ட சீமோனுக்குக் குணத்தை கொடுத்தவர், தொடக்கூடாத அவனைத் தொட்டார், ஆனால் சீமோன் இயேசுவை தொட்டு அவர் கால்களைக் கழுவ மறுக்கிறார். இந்நிலையில்தான் இயேசு மரியாள் இயேசுவின் கால்களை கழுவியே செயலை மெச்சி கொள்கிறார். சீமோன் செய்யாத பணிவு, தாழ்மை செயலை ஒரு பெண் செய்வது ஆச்சரியப்பட வேண்டிய நிகழ்ச்சியாகும்.

**2. மரியாளின் நற்செயல் செய்வதின் அற்பணிப்பு (மத்:26:10)**

மரியாள் செய்த இந்த செயல் அறிந்த இயேசு .." நீங்கள் இந்த ஸ்திரியை ஏன் தொந்தரவு படுத்துகிறீர்கள்? என்னிடத்தில் நற்கிரியைச் செய்திருக்கிறாள்." (மத்:26:10) ஒவ்வொரு மனிதரும் தம்மால் இயன்ற அளவு நல்லது செய்ய வேண்டும் என்று தான் திருமறை திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறது. இந்த மாபெரும் செயலின் செய்தியில் சீடர்களை பொருத்தமட்டில் ஒரு பெண்ணின் வெளிப்படையான அர்ப்பணிப்பு ஒரு நெருடலைக் கொடுத்தது. எனவே ஏழைகள் மீது கரிசனை கொல்வதை இங்கு சொல்லுகிறார்கள். ஆனால் இயேசுவோ ஏழைகள் எப்போதும் உங்களுடன் இருக்கிறார்கள் என சொன்னார்.



பிறகு இந்த நற்செயல் மூலம் என்னிடத்தில் முறையான செயலையே இந்தப் பெண் செய்திருக்கிறார் என்று சொல்லி நல்ல செயல் செய்வதற்கு மரியாளைப் போல அர்ப்பணிப்பு தேவை என்பதை உணர்த்துகிறார். இன்றைக்கு நாமும் நல்ல செயல்களை செய்வதற்கு மரியாளைப் போல நம்மை அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்.

**3. மரியாளின் தன்னலமற்ற அர்ப்பணிப்பு (மத்:26:7)**

வெள்ளைக்கல் பரணி என்பது கழுத்துப் பாகத்தை எளிதில் உடைத்து திறக்கக்கூடிய சிமிழ் போன்றதாகும். நளதம் என்பது இந்தியாவில் உள்ள அபூர்வமான செடியிலிருந்து கிடைக்கும் நறுமணப் பொருளாகும். இதனை மரியாள் தனக்கென்று வைத்திராமல் உடைத்து அப்படியே இயேசுவின் தலை முதல் பாதம் வரை ஊற்றினாள். யூதர்கள் விருந்து சமயத்தில் எண்ணெயால் அபிஷேகம் செய்தல் வழக்கம். ஆனால் இங்கு நறுமணத் தைலத்தால் இயேசுவை அடக்கம் பண்ணுவதற்கு ஆயத்தம் செய்தால் என்று கூறப்படுகிறது. தன்னலமற்ற அர்ப்பணிப்பு என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்தது ஒரு மதிப்பாகும். ஏனெனில் இது ஒருவரைத் தனது குறிக்கோளையும், வெற்றிகளையோ அடைய அனுமதிக்கிறது. அன்றைய சூழ்நிலையின் மத்தியில் மரியாள் ஒரு வெற்றி பெண்ணாகவே காணப்பட்டார். இது அவரின் தன்னலமற்ற அர்ப்பணிப்பின் அடையாளமாகும்..

**நிறைவாக**

அன்றைய இயேசுவின் காலத்தில் மரியாளின் அர்ப்பணிப்புள்ள வாழ்வைப் பற்றி நான்கு நற்செய்தி நூல்களிலும் சொல்லப்பட்டுள்ளது. இன்றைக்கு இந்த லெந்து நாட்களில் நம்முடைய அர்ப்பணிப்பு எப்படி இருக்கிறது என்பதை ஆராய்ந்து பார்த்து ஆண்டவரின் பாதத்தில் அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்

ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பாராக

ஆண்டவரின் உன்னதப் பணியில் உங்கள் ஆயரம்மா

*Mrs . E . Nancy Baskar*

# Sufficient Grace

## 2 Corinthians 12:7-10



*I thought the Christian life was going to be easier than this.* Have these words ever entered your mind? Sometimes we come into the family of God thinking that our heavenly Father will fix all our problems and devote Himself to our happiness and comfort. However, that is not the reality portrayed in Scripture. Paul was a man whom the Lord used greatly, and yet his life was anything but easy.

In fact, at one point, the apostle thought his pain was too much to bear, and he begged God to remove it. There's nothing wrong with asking the Lord to relieve our suffering, but what should our response be if He doesn't? Paul probably had no idea that His experience would find its way into the **Bible**, to comfort and guide believers throughout the ages. The promise God gave him applies to us as well: "My grace is sufficient for you" (2 Corinthians 12:9).





God's grace could be defined as His provision for us at the point of our need. The problem is that sometimes it doesn't seem as if the Lord truly is meeting our need. But He frequently sees deficiencies, outcomes, and complications that we don't. His goals for us involve spiritual growth, the development of Christ like character, and strong faith. And trials play a vital role in achieving these.

**The important issue is how we respond. If all you want is relief, you could descend into anger and doubt. But if your desire is to become the person God wants you to be, you'll see each trial as an opportunity for Christ to display His character and strength in you.**



Article by

RAVINDRA R.P.

For MEN'S FELLOWSHIP




# நன்றி

Article by
SIS. SWEETLIN FENZER

“எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள். அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்து தேவனுடைய சித்தமாயிருக்கிறது

- I தெசலோனிகேயர் 5:18

இயேசு கிறிஸ்து நமக்கு கற்றுக் கொடுத்த பாடங்களில் ஒன்று தான் நன்றி செலுத்துவது. இஸ்ரவேல் மக்கள் முதல் இத்தலைமுறையிலும் தேவனாகிய கர்த்தர் நம்மிடமிருந்து எதிர்பார்ப்பது இதைதான்.

இயேசு கிறிஸ்து பத்து குஷ்டரோகமுள்ள மனுஷர்களை குணப்படுத்திய போது, அதில் ஒரே ஒருவன் மட்டும் திரும்பி வந்து உரத்த சத்தத்தோடே தேவனை மகிமைப்படுத்தினான். அப்பொழுது இயேசு கூறியது, “சுத்தமானவர்கள் பத்து பேர் அல்லவா? மற்ற ஒன்பது பேர் எங்கே? என்று. (லூக்கா 17:11-19)

ஆம், இயேசு கிறிஸ்து நம் ஒவ்வொருவரிடம் இருந்தும் நன்றியை எதிர்பார்க்கிறார். நம்மில் எத்தனை பேர் நம்முடைய விண்ணபத்தை கர்த்தரிடத்தில் கேட்கும் பொழுது நன்றி சொல்வதை மறந்து விடுகிறோம்? துன்பம், கஷ்டம் வரும்போது எத்தனை பேர் கர்த்தரை குறித்து குறை கூறுகிறோம்? சிந்தித்துப் பாருங்கள்!!

யோபுக்கு கர்த்தர் கொடுத்த கஷ்டத்திலும், அவன் கர்த்தரை மகிமைப்படுத்தினானே தவிர, குறை கூறவில்லை. அதற்கு பலனாக தான்,

அவனுடைய முன்னிலமையைப் பார்க்கிலும், இரண்டத்தனையாய் கர்த்தர் அவனுக்குத் தந்தருளினார் (யோபு 42:10)

இயேசு கிறிஸ்துவில் பிரியமானவர்களே, எந்த பிரச்சனை, எவ்வளவு கஷ்டங்கள் வந்தாலும், கர்த்தர் நம்மை அரவணைத்து கொள்வார், நம்மை கைவிடமாட்டார் என்ற நம்பிக்கையும், நம்முடைய விண்ணபப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெப வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்தும் போது, நமக்குள் கர்த்தர் சமாதானத்தையும், எதையும் துணிவோடு எதிர்கொள்ளும் ஆற்றலையும் தருகிறார் என்ற விசுவாசமும் நம்மிடத்திலே இருக்குமேயானால் நம்மில் ஒருவரும் வாழ்வில் தோல்வியாளர்கள் அல்ல, வெற்றியாளர்களே !


*"Be Thankful"*



WOMEN'S Fellowship



# பாவஞ்செய்யவில்லையென்போமானால்




பாவ அறிக்கையின் ஜெபமானது, தேவனுக்கும் நமக்கும் இடையில் துண்டிப்பு இருக்குமானால், உறவு சரியாக இல்லையென்றால், அதைச் சரி செய்கின்றதாய் இருக்கிறது. இது மிக மிக முக்கியமானது. நம்முடைய வாழ்க்கையில் தேவனோடு கொண்டிருக்கிற தொடர்பில் நாம் சரியாக இருப்பது மிக மிக அவசியம். அநேகர் அதைக் குறித்துச் சிந்திப்பதில்லை. நம்முடைய வாழ்க்கையில் இதைக் குறித்து அதிக ஜாக்கிரதையாய் இருந்து தேவனோடு கொண்டிருக்கும்படியான தொடர்பை நம்முடைய வாழ்க்கையில் எப்போதும் காத்துக்கொள்ள உத்திரவாதிகளாய் இருக்கிறோம். தேவனுடைய வார்த்தை ஒருக்காலும் பொய்சொல்வதில்லை. தேவன் தம்முடைய குமாரனான இயேசு கிறிஸ்துவின் மூலமாய் நமக்கென்று சம்பாதித்த பாவ மன்னிப்பை நம்முடைய வாழ்க்கையில் நாம் அனுபவிக்கிறவர்களாய்க் காணப்படுவோம். சிலர் நான் என் பாவத்தை குறித்து எண்ணும்போது அது இன்னும் குற்றவுணர்வை ஏற்படுத்தும் என்று பயப்படுகிறதுண்டு. ஆனால் அது உண்மையல்ல. நம்முடைய பாவங்களை உண்மையான மனதோடு அறிக்கையிடும்போது கர்த்தர் நீதியும் உண்மையுமாயிருக்கிறார் என்று வேதம் சொல்லுகிறது. இது ஒரு விசுவாசிக்கு தேவன் சொல்லும்படியான காரியம். நாம் பல விதங்களில் நம் பரிசுத்த அளவில் குறைந்துவிடுகிறோம். ஆனால் இதை நாம் உணர்ந்து கழுவப்படும்பொழுது சுத்திகரிக்கப்பட்ட பாத்திரங்களாய் நம்முடைய மனசாட்சியில் தேவனுக்கு முன்பாக குற்றமற்றவர்களாய் காணப்படுவதற்கு அதிக உதவியாயிருக்கும்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும். ஆகவே நம்முடைய பாவங்களைக் குறித்து வருத்தப்பட்டு அதை அறிக்கைசெய்து மனந்திரும்பும்போது, மறுபடியும் அந்தப் பாவத்தை செய்யக்கூடிய சூழ்நிலைவரும்போது அதைக் குறித்து நாம் எச்சரிப்புள்ளவர்களாய் காணப்படுவோம். அநேக வேளைகளில் நாம் இதை உணராமல் இருப்போம். ஆனால் நம்முடைய பாவங்களைக் குறித்து உணராமல் அதை அறிக்கைசெய்யாமல் இருக்கும்பொழுது நம்முடைய ஜெபத்திற்கு அவைகள் தடையாக இருக்கும். ஆகவே நம்மைக் குறித்து ஆராய்ந்து நம் பாவங்களை அறிக்கை செய்து தேவனிடத்தில் மன்னிப்புக் கேட்பது நமக்கு உகந்த ஜெபமாகக் காணப்படும்.

YOUTH FELLOWSHIP

BEGINNER ARTICLE

# God's Miracles



Zia Miren



Smyrna Syntyche



Janet Zaharina



Shaana Liliya



Aashika Arun



Jemimah Ashok



Johannah Suresh

CLASS TEACHER - MRS. JONISH HERCHIL

FEBRUARY

# WINNERS

## Find the way

- Liana Ann Samuel
- Jania Preni
- Johan Sanjo
- Kariss Angelo
- Chris Gabriel
- Joshua.J
- Jessica

## Word Search

- Johan Sanjo
- Jaaon Eric
- Kariss Angelo
- J. Joshua
- Jessica
- Sherin Shah

## Kids Colouring

- Samuel Hebron
- Liana Ann Samuel
- Jania Preni
- J.Johana
- Jessica
- Kariss Angelo
- Chris Gabriel




## Cross Word

- Jason Eric
- Sherin Shah
- Johan Sanjo

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject: Your name / Quiz, type / Month – Year**

**To Church Email: csitcalain@gmail.com**

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

# C.S.I. - தமிழ் திருச்சபை - அல்-ஙெயன் -U.A.E.

## 40 நாள் லெந்துகால தியானம் - 2023

## Lenten Devotionals - 2023

Timing - 6.00 amto 6.30 am

நாள் : 22-02-2023 – சாம்பல் புதன் முதல் 08.04.2023 – சனிக்கிழமை வரை

| நாள் | தியான தலைப்பு - மாற்றுருவாக்கத்திற்கான வார்த்தைகள் (ரோமர்) | திருமறைப்பாடம் |
|---|---|---|
| 22-02-2023<br>சாம்பல் புதன் | கடவுளின் அன்பை பெற்றவர்கள்<br>Who are loved by God | ரோமர் 1:1 |
| 23-02-2023<br>வியாழன் | நற்செய்தியை தரும் கடவுள்<br>The Gospel he promised | ரோமர் 1:2 |
| 24-02-2023<br>வெள்ளி | தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவர்கள்<br>The Spirit of Holiness | ரோமர் 1:4 |
| 25-02-2023<br>சனி | பிற இனத்தார் அழைப்பு<br>To call people from among all the gentiles | ரோமர் 1:6 |
| 27-02-2023<br>திங்கள | நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை உலகம் முழுவதிலும் தெரிந்திருக்கிறது.<br>Your faith is being reported all over the world | ரோமர் 1:8 |
| 28-02-2023<br>செவ்வாய் | ஆவிக்குரிய கொடை ஏதேனும் உங்களுக்கு வழங்க வேண்டுமென விழைகிறேன்.<br>I may impart to you some spiritual gift to make you strong. | ரோமர் 1:11 |
| 01.03.2023<br>புதன் | நற்செய்தியே கடவுளின் மீட்பளிக்கும் வல்லமை<br>Gospel is the power of God for the Salvation | ரோமர் 1:16 |
| 02.03.2023<br>வியாழன் | தங்கள் நெறிகேட்டினால் உண்மையை ஒதுக்கி விடுகின்றார்கள்.<br>Suppress the truth by their wickedness | ரோமர் 1:18 |
| 03.03.2023<br>வெள்ளி | பிறருக்கு எதிராக தீர்ப்பு?<br>Who pass judgement on someone else? | ரோமர் 2:1 |
| 04.03.2023<br>சனி | உங்கள் மனம் மாறச் செய்வதற்கே கடவுள் பரிவு காட்டுகிறார்.<br>God's kindness leads you towards repentance | ரோமர் 2:4 |
| 06.03.2023<br>திங்கள் | கடவுள் ஆள் பார்த்துச் செயல்படுவதில்லை<br>For God does not show favoritism | ரோமர் 2:11 |
| 07.03.2023<br>செவ்வாய் | திருச்சட்டத்தைக் கேட்பதால் மட்டும் யாரும் கடவுளுக்கு ஏற்புடையவர் ஆவதில்லை.<br>For it is not those who hear the law | ரோமர் 2:13 |
| 08.03.2023<br>புதன் | உங்களால் கடவுளின் பெயர் இகழப்படுகின்றது.<br>God's name is blasphemed… because of you. | ரோமர் 2:24 |

Lenten Devotionals - 2023 Timing - 6.00 amto 6.30 am

| நாள் | தியான தலைப்பு - மாற்றுருவாக்கத்திற்கான வார்த்தைகள் (ரோமர்) | திருமறைப்பாடம் |
|---|---|---|
| 09.03.2023 வியாழன் | மனிதர்கள் பாவிகள் என்பதையே சட்டம் உணர்த்துகிறது.<br>Through the law we become conscious of sin. | ரோமர் 3:20 |
| 10.03.2023 வெள்ளி | தமது நீதியை கடவுள் பொறுமையோடு காட்டி வருகிறார்.<br>He did it to demonstrate his justice. | ரோமர் 3:26 |
| 11.03.2023 சனி | நம்பிக்கைக் கொண்டு கடவுளுக்கு ஏற்புடையவர் ஆனாதால் தான் அவ்வாக்குறுதி கிடைத்தது....<br>But the righteousness that comes by faith. | ரோமர் 4:13 |
| 13.03.2023 திங்கள் | பாவிகளாய் இருந்தபோதே, கிறிஸ்து நமக்காக தம் உயிரைக் கொடுத்தார்.<br>Christ died for us. | ரோமர் 5:8 |
| 14.03.2023 செவ்வாய் | கிறிஸ்துவின் வழியாய் அருள் ஆட்சி செய்கிறது.<br>So also grace might reign through righteousness. | ரோமர் 5:21 |
| 15.03.2023 புதன் | கடவுளுக்காக வாழ்கிறவர்கள் என்பதை எண்ணிக் கொள்ளுங்கள்.<br>But alive to God in Christ Jesus. | ரோமர் 6:11 |
| 16.03.2023 வியாழன | நீங்கள் காணும் பயன் தூய வாழ்வு<br>But now you have been set free from sin. | ரோமர் 6:22 |
| 17.03.2023 வெள்ளி | சட்டம் இல்லையேல் பாவத்திற்கு உயிர் இல்லை.<br>For apart from law sin is dead. | ரோமர் 7:8 |
| 18.03.2023 சனி | எதை வெறுக்கிறேனோ அதையே செய்கிறேன்.<br>But what I hate I do. | ரோமர் 7:14 |
| 20.03.2023 திங்கள் | ஊனியல் மனநிலை கடவுளுக்கு பகையானது<br>The sinful mind is hostile to God. | ரோமர் 8:7 |
| 21.03.2023 செவ்வாய் | கடவுளின் அன்பிலிருந்து நம்மை பிரிக்கவே முடியாது.<br>will not be able to separate from the love of God. | ரோமர் 8:39 |
| 22.03.2023 புதன் | கடவுள் இரக்கம் காட்டுவதாலேயே எல்லாம் ஆகிறது.<br>But on God's mercy. | ரோமர் 9:16 |
| 23.03.2023 வியாழன் | தடைக்கல்லின் மேல் தடுக்கி விழுந்தனர்.<br>They stumbled over the stumbling stone. | ரோமர் 9:32 |
| 24.03.2023 வெள்ளி | அவர்மீது நம்பிக்கை கொண்டோர் வெட்கத்திற்கு உள்ளாக மாட்டார்.<br>Anyone who trusts in him will never be put to shame. | ரோமர் 10:11 |

Lenten Devotionals - 2023 Timing - 6.00 amto 6.30 am

| நாள் | தியான தலைப்பு - மாற்றுருவாக்கத்திற்கான வார்த்தைகள் (ரோமர்) | திருமறைப்பாடம் |
|---|---|---|
| 25.03.2023<br>சனி | தவறி விழுந்தவர்களின் மேல் கண்டிப்பும் உங்கள் மேல் பரிவும் அவர் காட்டுகின்றார்.<br>Sternness to those who fell, but kindness to you. | ரோமர் 11:22 |
| 27.03.2023<br>திங்கள் | உங்கள் உள்ளம் புதுபிக்கப்பெற்று மாற்றம் அடைவதாக.<br>But be transformed by the renewing of your mind. | ரோமர் 12:2 |
| 28.03.2023<br>செவ்வாய் | நமக்கு அளிக்கப்பட்ட அருளுக்கேற்ப வெவ்வேறு அருட்கொடைகளைப் பெற்றுள்ளோம்.<br>We have different gifts, according to the grace given us. | ரோமர் 12:6 |
| 29.03.2023<br>புதன் | பிறர் உங்களைவிட மதிப்புக்கு உரியவரென எண்ணுங்கள்.<br>Honor one another above yourselves. | ரோமர் 12:10 |
| 30.03.2023<br>வியாழன் | பெருமிதம் வேண்டாம்.<br>Do not be proud. | ரோமர் 12:16 |
| 31.03.2023<br>வெள்ளி | பழிவாங்குதல் வேண்டாம்.<br>Do not take revenge. | ரோமர் 12:19 |
| 01.04.2023<br>சனி | நற்செயல் செய்வோர் ஆள்வோருக்கு அஞ்சவேண்டியதில்லை.<br>For rulers hold no terror for those who do right. | ரோமர் 13:3 |
| 03.04.2023<br>திங்கள் | இறையாட்சி என்பதும் நாம் உண்பதையும் குடிப்பதையும் அடிப்படையாகக் கொண்டதில்லை.<br>For the kingdom and God is not a matter of eating or dinking. | ரோமர் 14:17 |
| 04.04.2023<br>செவ்வாய் | உறுதியான மனநிலையோடு செய்யப்படாததெல்லாம் பாவமே.<br>Everything that does come from faith is sin. | ரோமர் 14:23 |
| 05.04.2023<br>புதன் | ஒருமனப்பட்டு... ஒரு வாய்ப்படப் போற்றி புகழ்வீர்கள்.<br>Give you a spirit of unity among yourselves as you follow Christ Jesus. | ரோமர் 15:6 |
| 06.04.2023<br>வியாழன் | கடவுளின் ஆவியின்... வேறெதைப்பற்றியும் பேச துணியமாட்டேன்.<br>I will not venture to speak anything except what Christ has accomplished. | ரோமர் 15:19 |
| 07.04.2023<br>வெள்ளி | எருசலேமில் வாழும் இறைமக்களுக்கு உண்மையில் பிற இனத்தார் கடன் பட்டவர்களே.<br>They owe it to the Jews to share with them their material blessings. | ரோமர் 15:27 |
| 08.04.2023<br>சனி | இதனால் அவர்கள் நற்செய்தியைக் கேட்டு நம்பிக்கை கொள்வர்.<br>So that all nations might believe and obey him. | ரோமர் 16:26 |

# EXODUS: 11-20

# யாத்திராகமம்: 11–20

MARCH '23 - QUESTIONS



*1. எங்கு பெரிய கூக்குரல் உண்டாகும்?*

*2. இஸ்ரவேலர் எங்கிருந்து எங்கு போனார்கள்?*

*3. இஸ்ரவேலர் எங்கு பாளைமிறங்கினார்கள்?*

*4. இஸ்ரவேலருக்கு வலது புறத்திலும், இடது புறத்திலும் எது மதிலாக நின்றது?*

*5. யார் கரைந்து போவார்கள்?*

*6. கர்த்தர் உங்கள் முறுமுறுப்புகளைக் கேட்டார் என்று யார் யார்? யாரிடத்தில் சொன்னது?*

*7. எங்கே கன்மலையின் மேல் நிற்பேன் என்று கர்த்தர் சொன்னார்?*




*8. நீர் செய்கிற காரியம் நல்லதல்ல என்று யார்? யாரிடம் சொன்னது?*

*9. இஸ்ரவேலர் மூன்றாம் மாதம் முதல் நாளில் எங்கு வந்தார்கள்?*

*10. மோசே, தேவன் இருந்த ---------------------------------- சமீபமாய் சேர்ந்தான்?*

## பிப்ரவரி - 2023-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. யாத்: 1:8 | 2. யாத்: 2:16 | 3. யாத்: 3:11 | 4. யாத்: 4:27 | 5. யாத்: 5:22

6. யாத்: 6:22 | 7. யாத்: 7:21 | 8. யாத்: 8:22 | 9. யாத்: 9:26 | 10. யாத்: 10:14

திருமதி.ராதிகா செல்வகுமார், திருமதி.ரோஸ்லின் பாலாஜி, திருமதி.பிப்லின் நெல்சன், திருமதி.ஜெயின் ராஜவேல்,

திருமதி. ரேனா ஜோஸ் செல்வகுமார், செல்வி.அஜின்ஷா, செல்வி.ஷைரின்ஷா, *DR.* சுவிட்லின் அபி

திருமதி.பமிலா ரேச்சல் டேனியல், திருமதி. ஜெயந்த ஜான்

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

Your Name / Bible Quiz / FEB'23 / Send to: csitcalain@gmail.com

056 766 8348

Name:

Date:

**Kids** Coloring

# RUTH

"ALL THAT YOU SAY, I WILL DO."




**Find the Way**

Name : ................................................................

# RUTH & NAOMI

Show Ruth and Naomi the way to Israel.



# RUTH

## WORD SEARCH

Find the words listed below


| | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| H | H | N | R | A | B | A | O | M | S | O | N | O | Z | V | E | W |
| L | S | Q | N | Y | C | T | Q | D | M | B | A | I | M | O | A | N |
| C | A | X | B | E | T | H | L | E | H | E | M | Z | A | O | B | B |
| K | I | N | S | M | A | N | R | E | D | E | E | M | E | R | E | I |
| N | W | Q | D | X | Y | X | N | B | W | D | Z | O | S | I | G | T |
| W | A | L | N | I | R | E | H | T | O | M | V | B | A | S | R | T |
| N | K | F | A | A | R | A | M | V | E | H | Z | E | H | Q | Z | E |
| X | D | U | E | Z | A | X | R | E | W | A | R | D | C | O | H | R |
| V | Q | U | L | S | M | M | D | D | Q | R | F | V | R | T | G | N |
| Q | W | Q | G | K | P | R | A | D | L | V | M | C | U | H | N | A |
| V | O | H | C | E | L | E | M | I | L | E | O | R | P | A | H | W |
| G | D | V | B | F | E | L | D | E | R | S | H | U | S | E | B | Z |
| H | N | W | W | W | X | G | L | R | E | T | N | V | P | O | X | N |

- MOAB
- ELIMELECH
- NAOMI
- ORPAH
- RUTH
- BETHLEHEM
- MARA
- BITTER
- BOAZ
- GLEAN
- GRAIN
- HARVEST
- REWARD
- MOTHER-IN-LAW
- KINSMAN-REDEEMER
- ELDERS
- PURCHASE
- LAND
- MARRY
- SON
- OBED

CROSS WORDS

Name : ..........................................................................

# THE BOOK OF RUTH




**Across**

**5.** Who was Elimelech's cousin

**7.** Who was Ruth's relatives

**8.** Naomi's other son

**11.** Who was Ruth's mother-in-law

**12.** The son's were called

**Down**

**1.** Who is the Redeemer

**2.** Who was Naomi's husband

**3.** Who was Jesse's Son

**4.** Name of Naomi's Son

**6.** What nationality was Naomi

**9.** Who was Jesse's Father

**10.** Who was David's father

# MARCH

| | |
|---|---|
| 01-MAR | Mr. David Livingston |
| 02-MAR | Mrs. Shaly Jesie |
| 02-MAR | Baby. Vamshi Juana.T.P D/o Mr. Thanu Lingam |
| 03-MAR | Mrs. Yesubai |
| 03-MAR | Mrs. M.Subha Alvin |
| 03-MAR | Mr G.Verslin Benny |
| 04-MAR | Mr. Libin Raj .K.G |
| 04-MAR | Baby. Samantha Baskar D/O Mr. Bhaskar Rajaram |
| 06-MAR | Mr. Hebin Jose George |
| 06-MAR | Mr. Derick Gasbath Joy |
| 06-MAR | Mr. Arul Raj |
| 13-MAR | Mastr. J.Joshua S/O Mr. M.Jose Selvakumar |
| 14-MAR | Mrs. Radhika Grace Selva Kumar |
| 15-MAR | Mrs. Eben A.Prasad |
| 16-MAR | Mrs. Bhuvaneshwari |
| 17-MAR | Mrs. R.Jackulin Milka |

*Wish you many more happy returns of the day God bless you all*

# MARCH

| | |
|---|---|
| 17-MAR | Mr. D.P.Joseph Jovin |
| 17-MAR | Mr. A.S.Kannan |
| 19-MAR | Mrs. Aji Kumari |
| 23-MAR | Baby. Gabrilin U.S.Shasmitha D/O Mr. Ujin Raj |
| 23-MAR | Mrs. M.Subha Alvin |
| 24-MAR | Mr. Lifin Raj.P |
| 24-MAR | Mr. Ruban |
| 25-MAR | Mrs. Rebecca |
| 27-MAR | Mastr. Johan Sanjo S/O Mr. Belfer John Sigamony |
| 27-MAR | Mastr. Jeroan Stanly S/O Mr. Stanly G |
| 28-MAR | Mastr. Ridhun Yojit S/O Mr. Sathish Kumar.T |
| 30-MAR | D.L. Derin S/O Mr. David Livingston |
| 30-MAR | Ms. Ajin Shah |
| 30-MAR | Baby. Efren Joan |
| 31-MAR | David Livingston S/O Dr. Livingston Samuel |
| 31-MAR | Ms. Annlin Sophia |

## MARCH *Wedding* ANNIVERSARY

**07-MAR**

Mr. Ujin Raj
&
Mrs. Sangeetha







# Church Picnic










EDITOR

THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348

Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY



# *Lent*

40 DAYS - 2023

JOIN SERVICES AT 6.00AM-6.30AM
ZOOM

WWW.CSITAMILPARISHALAIN.ORG